தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 244 | 4 Pages | 1.4.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| மலர்: 02 | இதழ்: 244 | 4 பக்கங்கள் | 1.4.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**

**வான நணிய துடைத்து**

**விளக்கம்:**

ஐயத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்க்கு அடைந்துள்ள இவ்வுலகை விட அடைய வேண்டிய மேலுலகம் அண்மையில் உள்ளதாகும்.

## பணய கைதி விடுவிப்பு, போர்நிறுத்த ஒப்பந்தம்; எகிப்து செயல் திட்டத்திற்கு ஹமாஸ் ஒப்புதல்



கெய்ரோ, ஏப் 1

காசா முனை பகுதியில் கடந்த 2007ம் ஆண்டு முதல் ஹமாஸ் அமைப்பினர் ஆட்சி செய்து வருகின்றனர். இந்நிலையில், இஸ்ரேல் மீது கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில் இஸ்ரேல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.

இதனைதொடர்ந்துகாசாவுக்குஎதிராகஇஸ்ரேல்போரில்இறங்கியது. ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசா பகுதியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தும், 1 லட்சத்து 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இந்த சூழலில், போர் நிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில் இஸ்ரேல் கைதிகள் மற்றும் பாலஸ்தீனிய கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டனர். இந்த முதல்கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் மார்ச் 1ந்தேதியுடன் முடிவடைந்தது. 2வது கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாமல் இருந்த சூழலில், காசா மீது இஸ்ரேல் தாக்குதலை தொடுத்தது. இதனால், பாலஸ்தீனியர்கள்தரப்பில்பலர்பலியானார்கள். இஸ்ரேல்தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

இந்நிலையில், எகிப்தின்பணயகைதிவிடுவிப்புமற்றும்போர்நிறுத்த ஒப்பந்தம் ஆகியவற்றுக்கான செயல் திட்டம் ஒன்றை வழங்கியது. இதற்கு ஹமாஸ் அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, அமெரிக்க இஸ்ரேலியரான ஈடன் அலெக்சாண்டர் உள்பட 5 பணய கைதிகளை விடுவிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் இதற்கு முன்பு, வழங்கிய செயல் திட்டம் போன்றே எகிப்தின் செயல் திட்டம் உள்ளது. எனினும், உயிரிழந்த பணய கைதிகளின் கூடுதல் உடல்களையும் திருப்பி கொடுப்பது பற்றி, இந்த புதிய செயல் திட்டத்தில் என்ன உள்ளது என்ற விவரம் தெரிய வரவில்லை.

இந்த 5 பணய கைதிகளுக்கு ஈடாக, முதல்கட்ட போர்நிறுத்த ஒப்பந்த நிபந்தனைகளின்படி இஸ்ரேல் நடந்து கொள்ள வேண்டும் என ஹமாஸ் அமைப்பு எதிர்பார்க்கிறது. அதனுடன், நிவாரண பொருட்களையும் காசாவுக்குள் அனுமதிக்க வேண்டும் உள்பட 2ம் கட்ட போர் போர்நிறுத்த ஒப்பந்த பேச்சுவார்த்தைக்கு உடன்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறது.

எகிப்தின் இந்த செயல் திட்டத்திற்கு ஈடாக, இஸ்ரேலும் பதிலுக்கு செயல் திட்டம் ஒன்றை அளித்துள்ளது. இதுபற்றி இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், மத்தியஸ்தர்களிடம் இருந்து செயல்திட்டம்ஒன்றுவந்தது. இதனைதொடர்ந்து, பிரதமர்நெதன்யாகு நேற்று தொடர்ச்சியாக ஆலோசனைகளை மேற்கொண்டார்.

அமெரிக்காவுடன் முழு அளவில் ஒருங்கிணைந்த முறையில், சில மணிநேரத்திற்கு முன், இஸ்ரேல் சார்பில் ஒரு புதிய செயல் திட்டம் அளிக்கப்பட்டு உள்ளது.

இந்த புதிய திட்டத்தின்படி, 5 பணய கைதிகள் விடுவிப்புக்கு ஈடாக, காசாவில்போர்நிறுத்தஒப்பந்தம்ஏற்படவழிவகுக்கும்எனஇஸ்ரேலின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளையில், பணய கைதிகள் விடுவிக்கப்படாவிட்டால், காசா பகுதிகளில் இஸ்ரேல் நிரந்தரமாக இருக்கும் என இஸ்ரேலின் பாதுகாப்பு மந்திரி இஸ்ரேல் கத்ஜ் இந்த வார தொடக்கத்தில் எச்சரித்து இருந்தது கவனிக்கத்தக்கது.

## உலக சுகாதார அமைப்பு மாநாடு; 2040க்குள் காற்று மாசு பாதிப்புகளை பாதியாக குறைக்க 50 நாடுகள் உறுதி




பொகோட்டா, ஏப் 1

தென்அமெரிக்கநாடான கொலம்பியாவின் கார்டாஜினா நகரில் உலக சுகாதார அமைப்பின் சர்வதேச மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல்வேறு உலக நாடுகளின் பிரதிநிதிகள், அறிவியலாளர்கள், சுகாதார அமைப்புகள் உள்பட 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில், 2040ம் ஆண்டுக்குள் காற்று மாசு காரணமாக ஏற்படும் பாதிப்புகளை பாதியாக குறைக்க சுமார் 50 நாடுகள் உறுதியளித்துள்ளன. காற்றை தூய்மையாக்க அனைத்து தரப்பில்இருந்தும்அவசரநடவடிக்கைகள்தேவை என்று உலகசுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் வலியுறுத்தினார்.

கொலம்பியா அரசாங்கத்துடன் இணைந்து உலக சுகாதார அமைப்பு நடத்திய இந்த மாநாட்டில், கொலம்பியாவின் அதிபர் குஸ்டாவோ பெட்ரோ கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், வன்முறையை விட காற்று மாசு காரணமாக அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும், இந்த மாநாடு சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியத்திற்கான கொள்கைகளை செயல்படுத்துவதற்கான நமது உறுதியை வலுப்படுத்துகிறது என்றும் தெரிவித்தார்.

இந்திய அரசு சார்பில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்ட ஆகாஷ் ஸ்ரீவஸ்தவா, "2040ம் ஆண்டுக்குள் காற்று மாசுபாட்டின் உடல்நல பாதிப்புகளை குறைக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது" என்று தெரிவித்தார்.

# பல தலைமுறையினரிடம் கனவுகளை ஊக்குவிக்கும் தருணமாக இது அமைந்தது முதல்வர் மு.க.ஸ்டாலின்





சென்னை, ஏப் 1

தமிழகத்தில் கால்பந்து விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்திய முன்னாள் வீரர்களை கொண்ட ஆல்ஸ்டார் இந்திய அணியுடன், 2002ம் ஆண்டு உலககக்கோப்பையை வென்ற பிரேசில் அணி காட்சி போட்டியில் விளையாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த போட்டி நேற்றிரவு சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடந்தது. துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இரு அணி வீரர்களுடன் கைகுலுக்கி ஆட்டத்தை தொடங்கி வைத்தார்.

முன்னாள் கால்பந்து ஹீரோக்களை காண 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் குவிந்ததால் நேரு ஸ்டேடியமே குலுங்கியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பிரேசில் ஜாம்பவான் அணி 21 என்ற கோல் கணக்கில் ஆல்ஸ்டார் இந்தியாவை தோற்கடித்தது.


இந்நிலையில் இந்த போட்டி குறித்து தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பாராட்டியுள்ளார்.

இது குறித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "பிரேசில் லெஜண்ட்ஸ் அணியும் இந்தியா ஆல் ஸ்டார்ஸ் அணியும் மோதிய கால்பந்து போட்டி சென்னையில் நேற்று நடைபெற்றதைக் காண மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. தமிழ்நாடு பெருமிதத்தோடு நேற்று இரவு ஆர்ப்பரித்துள்ளது.

ஒரு விளையாட்டுப் போட்டி என்பதைத் தாண்டி, நினைவில் கொள்ளத்தக்க, அடுத்து பல தலைமுறையினரிடம் கனவுகளை ஊக்குவிக்கும் தருணமாக இப்போட்டி அமைந்திருந்தது.

பிள்ளைகளே, நன்கு படியுங்கள், தைரியமாகவிளையாடுங்கள், நியாயமான முறையில் வெல்லுங்கள்!" என்று பதிவிட்டுள்ளார்.

## பத்துகாணி மலைவாழ் மக்களின் வசதிக்காக இலவச ஆம்புலன்ஸ் சேவை




கன்னியாகுமரி, ஏப்1

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா› தனது செய்திக்குறிப்பில் தெரிவிக்கையில்

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மக்களின் அவசர மருத்துவ பயன்பாட்டிற்காக 108 ஆம்புலன்ஸ் சேவையை துவங்கினார்கள். பொதுமக்களின் பயன்பாட் டுக்கு ஏற்றபடி படிப்படியாக ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கையை உயர்த்தி தற்போது தமிழ்நாட்டிற் குட்பட்ட பகுதிகள் முழுவதும் 1353 ஆம்புலன்ஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமாரி மாவட்டத்தில் மொத்தம் 17, 108 ஆம்புலன்ஸ் அவசர ஊர்திகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் 12 அடிப்படை உயிர் காக்கும் கருவிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள்› நான்கு அதி நவீன உயிர்க்காக்கும் வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ்களும்› ஒரு பச்சிளம் குழந்தைகளுக்கு உண்டான ஆம்புலன்சும் இயக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமாரி மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் வருடம் 25279 பொதுமக்கள் ஆம்புலன்ஸ் சேவையில் பயன்பெற்றுள்ளார்கள். தற்போது கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட பத்துக்காணி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மலைவாழ் மக்களின் அவசர தேவைக்காக ஆம்புலன்ஸ் ஒன்று கூடுதலாக மாவட்டத்தில் அதிகரிக்கபட்டு› கடந்த 29.03.2025 (சனிக்கிழமை) அன்று மலைவாழ் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த கூடுதலாக இயக்கப்பட்டுள்ள ஆம்புலன்ஸில் உயிர் காக்கும் அனைத்து மருத்துவ உபகரணங்கள் மருந்துகள் உள்ளன. பத்துக்காணி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றியுள்ள மலைவாழ் மக்கள் மிகவும் பயன்பெறுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கலெக்டர் .ஆர். அழகுமீனா தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

## தூத்துக்குடியில் புகையிலை, மதுபாட்டில்கள் விற்றவர் கைது




தூத்துக்குடி ஏப் 1

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவின்படி, தூத்துக்குடி ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி.சுதீர்மேற்பார்வையில் சிப்காட் இன்ஸ்பெக்டர் சைரஸ் தலைமையில் எஸ்.ஐ. சுப்புராஜ் மற்றும் போலீசார் நேற்று (29.03.2025) ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது தூத்துக்குடியில் மடத்தூர், தெற்கு தெருவில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்தவரை பிடித்து விசாரணை செய்தனர். அதில் அவர் அதே பகுதியைச் சேர்ந்த மாடதங்கம் மகன் ராஜவேல் (வயது 54) என்பதும், அவரது வீட்டில் சட்டவிரோத விற்பனைக்காக தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் மதுபான பாட்டில்களை பதுக்கி வைத்திருந்ததும் விசாரணையில் தெரியவந்தது.

உடனே மேற்சொன்ன போலீசார் ராஜவேலை கைது செய்து அவரிடம் இருந்த ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள 37 கிலோ 800 கிராம்புகையிலைபொருட்கள்மற்றும்29மதுபாட்டில்களையும் பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து சிப்காட் போலீசார் வழக்குப்பதிவுசெய்துவிசாரணைமேற்கொண்டுவருகின்றனர்.

## ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 4வது கல்லூரி ஆண்டு விழா



திண்டுக்கல், ஏப்.1

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில் மாவட்ட கலெக்டர் செ.சரவணன், முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4வது கல்லூரி ஆண்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் இயங்கும் அனைத்து கல்லூரிகளிலும் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் காலை சிற்றுண்டி திட்டம், 2024 டிசம்பர் மாதம் முதல் மதிய உணவு திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

கல்லூரியில் படிக்கும் மாணவியர்கள் கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை ஆகியவைகளை கடைபிடித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். உங்கள் எண்ணங்கள் வானத்தை தொடுகின்ற அளவிற்கு இருக்க வேண்டும். குறிக்கோள், விடாமுயற்சி, தன்னம்பிக்கையுடன் படிக்க வேண்டும். மேலும், இக்கல்லூரியில் படித்த மாணவியர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினார்கள் என்ற பெருமையை நீங்கள் ஏற்படுத்தி தர வேண்டும். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், அரசு நகரப் பேருந்துகளில் மகளில் இலவச பயணம்மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப்பட்டு, வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் சுமார் ரூ.900 வரை சேமிப்பு ஏற்படுகிறது.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி( தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர்கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. படித்து, இந்த சமுதாயத்திற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் உங்கள் வாழ்க்கையில் உயர வேண்டும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.



அமைச்சர் பொன்முடி, கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் விழுப்புரம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் அருணாபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வழங்கிய கோரிக்கை மனுவின் உடனடி தீர்வாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளி மிங்கலனால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலியினை வழங்கினார்.

## கிரிவல பாதையில் நிர்வாணமாக சென்ற சாமியார் தி.மலையில் பரபரப்பு

திருவண்ணாமலை, ஏப்1

பஞ்சபூத தலங்களில் புகழ்பெற்ற அக்னி தலமாக விளங்குவது திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் ஆகும். இங்கு 14 கிலோமீட்டர் தூரமுள்ள கிரிவலப்பாதையில் வெளிமாவட்ட பக்தர்கள் மற்றும் வெளிமாநில பக்தர்களும் வருவது வழக்கம்.



குறிப்பாக ஆந்திரா, தெலுங்கானா பகுதிகளில் இருந்து பக்தர்கள் குழுவாக நடனமாடியும், சிவனின் பக்தி பாடல்களை இசைத்தும் கிரிவலம் மேற்கொள்வது வழக்கம்.

இந்த நிலையில் இன்று ஒரு பக்தர் நிர்வாணமாக கிரிவலம் மேற்கொண்டது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது. இதனையடுத்து தகவலறிந்த போலீசார் உடனடியாக அவரைதடுத்து நிறுத்தி புத்தாடையை அவருக்கு அணிவித்து அறிவுரைகளை வழங்கி அங்கிருந்து அனுப்பி வைத்தனர்.

## தூத்துக்குடி: போக்சோ வழக்குகளில் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி, ஏப்.1

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில், தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய போக்சோ வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடி, அன்னை தெரசா மீனவர்காலனி பகுதியைச் சேர்ந்த சேவியர் மகன் செல்வன் (வயது 39) மற்றும் புதுக்கோட்டை காவல் நிலைய போக்சோ வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடி, மடத்தூர் பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் ராகுல் (வயது 25) ஆகிய இருவரையும் நேற்று முன்தினம் (28.03.2025) சம்பந்தப்பட்ட காவல் நிலைய போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## குடும்ப தகராறு: 2 குழந்தைகளுக்கு விஷம் கொடுத்துவிட்டு பெண் தற்கொலை முயற்சி மருத்துவமனையில் சிகிச்சை

தென்காசி, ஏப்.1

தென்காசி மாவட்டம் சுரண்டை அருகே வலங்கைப்புலி சமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்தவர் மகேந்திரன் (40 வயது). கூலி தொழிலாளியான இவருடைய மனைவி மகேஷ் (34 வயது). இவர்களுக்கு சுதர்சன் (6 வயது), முகிலன் (2 வயது) ஆகிய 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். கணவன்மனைவி இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டது. நேற்று முன்தினம் இரவில் அவர்களுக்கு இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. அப்போது மகேந்திரன், மனைவி மகேஷை தாக்கியதாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த மகேஷ் பூச்சிக்கொல்லி மருந்தை (விஷம்) தனது 2 குழந்தைகளுக்கும் குடிக்க கொடுத்துவிட்டு, அதனை தானும் குடித்து தற்கொலைக்கு முயன்றார். இதனால் குழந்தைகள் அலறி துடித்தனர். உடனடியாக அக்கம்பக்கத்தினர் விரைந்து சென்று, மகேஷ் மற்றும் 2 குழந்தைகளையும் மீட்டு சிகிச்சைக்காக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து சேர்ந்தமரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குடும்ப தகராறில் 2 குழந்தைகளுக்கு விஷம் கொடுத்துவிட்டு தாய் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நீலகிரி வனப்பகுதியில் ராட்சத காட்டுத்தீ

நீலகிரி, ஏப்.1

நிலகிரி மாவட்டம் கூடலூரை சுற்றி இருக்கக்கூடிய வனப்பகுதிகளில் வெயிலின் தாக்கத்தால் கடும் வறட்சி ஏற்பட்டு மரங்கள் முழுமையாக காய்ந்துள்ளது.

முதுமலை ஒட்டிய ஆச்சக்கரை பகுதியில் ஏராளமான மூங்கில் மரங்கள் உள்ளன. இந்த நிலையில் இன்று திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. மரங்கள் அனைத்தும் காய்ந்துள்ள நிலையில் சுமார் 50 மீட்டர் உயரத்திற்கு தீ கொழுந்து விட்டு எரிந்தது.



இது குறித்து தகவலறிந்த வனத்துறையினர் மற்றும் தீயணைப்புத்துறையின் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## 100 நாள் வேலையில் முறைகேடா? விசாரணை ஆணையம் அமைத்து கண்டுபிடிக்கட்டும்: அமைச்சர் ரகுபதி பேச்சு

சென்னை, ஏப்1

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"100 நாள் வேலையில் முறைகேடு நடைபெறுகிறதா? என்பதை பா.ஜ.க. அரசு விசாரணை ஆணையம் அமைத்து கண்டுபிடிக்கட்டும். இந்தியாவிலேயே 100 நாள் வேலை திட்டத்தை மிகச்சிறப்பாக செயல்படுத்தி வரும் மாநிலம் தமிழ்நாடுதான்.



தொகுதி மறுசீரமைப்பு மூலம் தென் மாநிலங்களில் தொகுதிகள் குறையாது என்று கூறும் உள்துறை மந்திரி, வட மாநிலங்களில் தொகுதிகள் கூடாது என்று உறுதியளிக்க தயாரா?

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டின் நலனுக்காக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்ததாக கூறுகிறார். அதே சமயம், அ.தி.மு.க.பா.ஜ.க. கூட்டணி விரைவில் அறிவிக்கப்படும் என்று அமித்ஷா கூறுகிறார். இதில் யார் பொய் சொல்கிறார் என்பது விரைவில் தெரியும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திருவண்ணாமலை: நிலத்தகராறில் முன்விரோதம்... வீடு புகுந்து 4 பேருக்கு அரிவாள் வெட்டு

திருவண்ணாமலை, ஏப்1

திருவண்ணாமலை ஆரணி அருகே மெய்யூர் கிராமத்தை சேர்ந்தவர் சேகர். இவருடைய மனைவி வசந்தம்மாள், இவர்களுக்கு குமரேசன், லோகேஸ் என இரண்டு மகன்கள் உள்ளனர். அதே கிராமத்தை சேர்ந்த மாதவன் என்பவருக்கும், இவர்களுக்கும் நிலத்தகராறில் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது.

இது சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டு இருந்தது. இதில் சேகருக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததாக கூறப்படுகிறது. சேகர் அந்த நிலத்தில் இருக்கக்கூடிய மரம் செடிக்கொடிகளை அகற்ற வேலை ஆட்களுடன் சென்றபோது. சேகருக்கும் மாதவனுக்கும் மீண்டும் பிரச்சினை எழுந்தது.

இந்த நிலையில் சேகரின் வீட்டுக்குள் சுமார் 8 பேர் கொண்ட கும்பல் நுழைந்து சேகர், வசந்தம்மாள், குமரேசன், லோகேஸ் ஆகியோரை தாக்கினர்.

இந்த தாக்குதலில் 4 பேருக்கும் சரமாரியாக அரிவாள் வெட்டு விழுந்தது. இதில் சேகருக்கும் குமரேசனுக்கும் தலையில் அரிவாள் வெட்டு விழுந்து தற்போது ஆரணி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் தலைமறைவாக உள்ள மாதவன் மற்றும் அவரது குடும்பத்தினரையும் தேடி வருகின்றனர்.

## ஈரோடு அருகே நச்சு வாயு தாக்கி இருவர் உயிரிழப்பு

ஈரோடு, ஏப் 1

ஈரோடு மாவட்டம் பவானி அருகே லட்சுமி நகர் அடுத்துள்ள கோணவாய்க்கால் பகுதியில் வாட்டர் சர்வீஸ் ஸ்டேஷன் ஒன்று செயல்பட்டு வருகிறது. அங்கு போரிக் ஆசிட் டேங்கர் லாரி ஒன்று தூய்மைப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், ஊழியர்களான யுவனேந்தல் (55), சக்திவேல் (52) செல்லப்பன் (52) ஆகியோர் டேங்கர் லாரியை சுத்தம் செய்ய முயன்ற நிலையில் மூவரும் திடீரென மயங்கி விழுந்துள்ளனர். உடனடியாக அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்தது தெரியவந்தது.

மூன்றாவது நபர் தற்பொழுது பவானி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த பவானி நகர போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திண்டுக்கல்: நத்தமாடிப்பட்டி ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டி 38 பேர் காயம்

திண்டுக்கல், ஏப். 1

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி அருகே நத்தமாடிப்பட்டியில் மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் பங்குனி மாத திருவிழாவையொட்டி நேற்று ஜல்லிக்கட்டு நடந்தது.

இதில் திண்டுக்கல், மதுரை, திருச்சி, அலங்காநல்லூர், சத்திரபட்டி, மேலூர், அவனியாபுரம், நத்தம், சிவகங்கை, சிங்கம்புணரி மற்றும் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த 700 காளைகள் பங்கேற்றன. 250 மாடுபிடி வீரர்கள் கலந்துகொண்டனர்.



காளைகளின் திமிலை பிடித்து அடக்குவதற்காக மாடுபிடி வீரர்களும் உற்சாகத்துடன் பாய்ந்து சென்றனர். அதில் சில காளைகள் மாடுபிடி வீரர்களிடம் சிக்கி அடங்கியது. சில காளைகள், மைதானத்தில் சுற்றி வளைத்த வீரர்களை எதிர்த்து நின்றதோடு, அவர்களை கொம்புகளால் குத்தி தூக்கி பறக்க விட்டும், கால்களால் உதைத்தும் பந்தாடின.

பரபரப்பாக நடந்த இந்த ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டியதில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போலீஸ்காரர், மாடுபிடி வீரர்கள், பார்வையாளர்கள், காளைகளின் உரிமையாளர்கள் என மொத்தம் 38 பேர் காயமடைந்தனர்.

ஜல்லிக்கட்டில் சிறப்பாய்ந்த காளைகளை சிறப்பான முறையில் அடக்கிய வீரர்களுக்கும், மாடுபிடி வீரர்களுக்கு போக்குக் காட்டி ஓடிச்சென்று வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கும் சைக்கிள், டைனிங் டேபிள், பொங்கல் பானை, வெள்ளிக்காசு, வயர்கட்டில், எவர்சில்வர் பாத்திரங்கள், குக்கர் ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை நத்தமாடிப்பட்டி ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

## பிரதமர் மோடியை விமர்சித்த விஜய்: சரத்குமார் பதிலடி

சென்னை, ஏப்.1

தவெக பொதுக்குழு கூட்டத்தில் பேசிய அக்கட்சியின்தலைவர்விஜய், பிரதமர் மோடியையும், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினையும் விமர்சனம் செய்து பேசி இருந்தார். இந்த நிலையில், பிரதமர் மோடியை விமர்சித்த விஜய்க்கு நடிகரும்,பாஜகநிர்வாகியுமான சரத்குமார்பதிலடி கொடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;



"த.வெ.க., பொதுக்குழுவில், விஜய் உண்மைக்கு புறம்பாக மத்திய அரசை விமர்சித்து பேசியது, விநோதமாகவும், வேடிக்கையாகவும் இருந்தது. உலக அளவில் இந்திய பொருளாதாரம் முன்னேறி வருகிறது. விரைவில், மூன்றாவது இடத்தை பிடிக்கும் என, சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்து செல்லும் பிரதமர் மோடியை, சர்வதேச தலைவர்கள் வியந்து பாராட்டி வருகின்றனர். அவர் குறித்து பேசுவதற்கு முன், உண்மை தெரிந்து பேசியிருக்க வேண்டும். எதற்காக, மாநிலஅரசுக்கு, கல்விக்கான நிதியை, மத்திய அரசு விடுவிக்காமல் உள்ளது. வரி பங்கீடு ஏன் குறைகிறது. எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கின்றனர் என்ற விபரங்களை அறிந்து, பொதுக்குழுவில் பேசியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

கடந்த 2004 14ம் ஆண்டில், தமிழகத்திற்கு வரிப் பகிர்வு, 94,971 கோடி ரூபாயாகஇருந்தது.கடந்த 2014 24ம் ஆண்டில், 2 லட்சத்து, 92 ஆயிரத்து 13 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 207 சதவீதம்அதிகம்.கடந்த2004 14ம் ஆண்டில், மத்திய அரசின் உதவி மற்றும் மானியங்கள் வாயிலாக, 57,925 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், 2014 24ம் ஆண்டில், 2 லட்சத்து 55 லட்சத்து 975 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இது 342 சதவீதம்.

மத்தியிலே நடக்கும் சிறந்த ஆட்சியை, உலகம் போற்றும் பிரதமர் மோடியை, சாதாரண மனிதராக எண்ணி, கேலியாக பேசியது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## சேலம்: நாய் கடித்ததால் ரேபிஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டு சிறுவன் பலி

சேலம், ஏப்.2

சேலம் மாவட்டம் வீராணம் பகுதியை சேர்ந்தவர் முனுசாமி. கூலித்தொழிலாளி. இவருடைய மகன் கிஷோர் (வயது 9). இவன் அந்த பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வந்தான்.

சிறுவனுக்கு கடந்த 28ந்தேதி திடீரென உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து பெற்றோர்,தங்கள்மகனைவீராணம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்தனர்.

அங்கு டாக்டர்கள் சிறுவனை பரிசோதித்த போது நாய் கடித்தால் ரேபீஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது தெரிந்தது. இதையடுத்து சிறுவனிடம் கேட்ட போது சமீபத்தில் விளையாடி கொண்டிருந்த போது நாய் கடித்தது என்று கூறி உள்ளான்.

இதனால் அதிர்ச்சி அடைந்த டாக்டர்கள் சிறுவனுக்கு முதல் உதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் சேலம் அரசு ஆஸ்பத்திரியில் சிறுவன் சேர்க்கப்பட்டான். அங்கு சிகிச்சை பலனின்றி அன்று இரவு சிறுவன் பரிதாபமாக இறந்தான்.

இது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, 'நாய் கடித்து பல நாட்கள் ஆகியும் அது பற்றி சிறுவன் பெற்றோரிடம் கூறாமல் இருந்து உள்ளான். இதனால் நாய்க்கடியால் ஏற்படும் ரேபீஸ் நோய் பாதித்து சிறுவன் இறந்து உள்ளான்.தற்போதுபள்ளி விடுமுறை என்பதால் சிறுவர்கள், மாணவர்கள் வீட்டில் இருப்பார்கள். அப்போது வீட்டில் வளர்க்கும் நாய்களின் உமிழ் நீர் பட்டாலே அதற்கான தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். மேலும் நாய்களுக்கும்தடுப்பூசிசெலுத்த வேண்டும்' என்றார்கள்.

## 'பொதுமக்களை ஒருமுறை கூட சந்திக்காதவர் தி.மு.க.வை எதிரி என்று சொல்கிறார்' அமைச்சர் கே.என்.நேரு பேச்சு

திருச்சி, ஏப்.1

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் பொதுக்குழு கூட்டம், சென்னை திருவான்மியூரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது. இந்த கூட்டத்தில் பேசிய த.வெ.க. தலைவர் விஜய், "2026ம் ஆண்டு தமிழ்நாடு இதுவரை சந்திக்காத ஒரு வித்தியாசமான தேர்தலை சந்திக்கும். இரண்டே இரண்டு பேருக்கு நடுவில் தான் போட்டியே. ஒன்று த.வெ.க. இன்னொன்று தி.மு.க." என்று கூறியிருந்தார்.



இந்நிலையில், விஜய்யின் பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமைச்சர் கே.என்.நேரு, திருச்சியில் நடைபெற்ற முதல்அமைச்சர் பிறந்த நாள் வாழ்த்தரங்கத்தில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"நேற்று வரை நடிகராக இருந்தவர், அரசியலுக்கு வந்து பொதுமக்களை ஒருமுறை கூட சந்திக்காதவர், கூட்டரங்கத்தில் கூட்டத்தை கூட்டிக் கொண்டு எங்களுக்கு தி.மு.க.தான் முக்கிய எதிரி என்று கூறுகிறார். அவரையும் தி.மு.க. சந்திக்கும். 2026ல் மு.க.ஸ்டாலின்தான் மீண்டும் முதல்அமைச்சராக வருவார்.

முதல்அமைச்சர் அமைதியாக இருந்தாலும், அனைத்தையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். மத்தியில் இருப்பவர்கள் தி.மு.க.வை அகற்ற வேண்டும் என்று கூறி வருகிறார்கள். ஆனால் அவர்களால் தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. மறுபுறம், பா.ஜ.க.வுடன் சேர மாட்டோம் என்று சொன்னவர்கள் இப்போது ஓடிச் சென்று அவர்களுடன் சேர்கிறார்கள். அனைவரையும் சந்திக்க தி.மு.க.வினர் ஆயத்தமாக இருக்க வேண்டும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வார விடுமுறை: ஒகேனக்கல்லில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஒகேனக்கல், ஏப்1

தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமான ஒகேனக்கல்லுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வது வழக்கம். அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்வர்.

இதனிடையே தமிழகத்தில் தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகளவில் உள்ளது. இன்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 1,000 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.



இந்த நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல்லில் குவிந்தனர். பின்னர் அவர்கள் எண்ணெய் மசாஜ் செய்து கொண்டு மெயின் அருவி, சினி பால்ஸ் மற்றும் காவிரி ஆற்றில் பல்வேறு இடங்களில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

பின்னர் அவர்கள் குடும்பத்தினர், நண்பர்களுடன் பாதுகாப்புஉடைஅணிந்து பாறைகளுக்கு இடையே காவிரி ஆற்றில் உற்சாகமாக பரிசலில் சென்றனர். மேலும் சுற்றுலா பயணிகள் மீன் அருங்காட்சியகம், முதலை பண்ணை உள்ளிட்ட பகுதிகளை சுற்றி பார்த்தனர். சிலர் தொங்கு பாலத்தில் நின்றும் காவிரி ஆற்றை கண்டு ரசித்தனர்.

# 13 வயது சிறுமியை பலாத்காரம் செய்த உறவினருக்கு 20 ஆண்டு சிறை

சென்னை, ஏப் 1

சென்னை மயிலாப்பூர் தம்பதியின் 13 வயது சிறுமி கடந்த 2020ம் ஆண்டு வீட்டில் தனியாக இருந்தார்.

அப்போது, 38 வயதுடைய அவரது உறவினர் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தார்.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் கொடுத்த புகாரின் அடிப்படையில், குற்றவாளியை போக்சோ சட்டத்தின்கீழ் மயிலாப்பூர் அனைத்து மகளிர் போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கு சென்னையில் உள்ள போக்சோ வழக்கை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. போலீஸ் தரப்பில் சிறப்பு குற்றவியல் வக்கீல் எஸ். அனிதா ஆஜராகி வாதிட்டார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.ராஜலட்சுமி, ``சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தவர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன. அதனால், அவருக்கு 20 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும், 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன்.

இந்த அபராத தொகையை பாதிக்கப்பட்ட சிறுமிக்கு வழங்க வேண்டும்.

இதுதவிர தமிழ்நாடு அரசு இழப்பீடாக ரூ.3 லட்சத்தை வழங்கவேண்டும்'' என்று தீர்ப்பு அளித்தார்.

# பாண்டிபஜார் செல்போன் திருட்டு வழக்கில் தலைமறைவு குற்றவாளி கைது: 1 செல்போன்பறிமுதல்



சென்னை, ஐயப்பன்தாங்கல், பரணிபுத்தூர்பகுதியைச்சேர்ந்தரவி, வ/58, த/பெ.கல்வராயன்என்பவர்கடந்த 22.08.2024 அன்றுமாநகரபேருந்தில்ஏறிபயணம் செய்தபோது, கே.கே. நகர்சிவன்பார்க்பகுதியில் பஸ்சில்ஏறிய 3 நபர்களுள்ஒருவர்மேற்படிரவியின் செல்போனைதிருடியுள்ளார். உடனேரவிமேற்படி நபரிடம்செல்போனைதிரும்பதருமாறுகேட்டபோது. பேருந்திலிருந்துஇறங்கியதும்திரும்பதந்துவிடுவதாககூறியுள்ளார். இந்நிலையில்தி. நகர், பனகல்பா ர்க்பேருந்துநிறுத்தத்தில்இறங்கியதும்ரவிமேற்படிநபர்களிடம்செல்போனைகேட்டபோது, அவர்கள்செல்போனைகொடுக்காமல்ரவியைமிரட்டிஅவரிடமிருந்து ரூ.600/ஐ பறித்துக்கொண்டும்தப்பிச்சென்றுள்ளனர்.

இதுகுறித்துரவி R4 சௌந்திரபாண்டியனார்அங்காடி காவல்நிலையத்தில்கொடுத்தபுகாரின்பேரில்போலீசார்வழக்குப்பதிவுசெய்து விசாரணைமேற்கொண்டு மேற்படிவழக்கில்சம்பந்தப்பட்டபிரபாகரன்மற்றும் சரண்ராஜ்ஆகியஇருவரும் கைதுசெய்யப்பட்டுநீதிமன்றகாவலுக்குஉட்படுத்தப்பட்டனர். R4சௌந்திரபாண்டி யனார் அங்காடிகாவல்நிலையகுற்றப்பிரிவுஆய்வாளர்தலைமையிலான காவல் ஆய்வாளர் மணிமாலா, ஏட்டு ஜெயராமன், காவலர் ஏழுமலை ஆகிய காவல்குழுவினர்தீவிரவிசாரணை செய்துமேற்படிசெல்போன்பறிப்புவழக்கில்சம்பந்தப்பட்டதலைமறைவு குற்றவாளிமகேந்திரன் (எ) சந்துரு, வ/39, த/பெ. துளசி, வில்லிவாக்கம், சென்னை என்பவரை 28.03.2025 அன்றுகைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன்பறிமுதல் செய்யப்பட்டது.

விசரணையில்மகேந்திரன் (எ) சந்துருமீதுஏற்கனவே ஒருகுற்றவழக்கு உள்ளதுதெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் கைதுசெய்யப்பட்ட மகேந்திரன் (எ) சந்துரு 28.03.2025 அன்றுநீதிமன்றத்தில்ஆஜர்செய்யப்பட்டு நீதிமன்றஉத்தரவுப்படிசிறையில் அடைக்கப்பட்டார்.

# காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக பிரமுகர் இல்ல மணவிழா: தொழிலதிபர் எம். ஏ. நாதன் தலைமை கோதண்டபாணி, எஸ்தர் மேரி, ஆர். வி. எஸ். அரங்கநாதன், பங்கேற்பு



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக வேலடிதம்மம் கிராம திமுக ஒன்றியப்பிரதிநிதி லிங்கநாதன் ஜெயராணி இல்லமணவிழா மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆசியோடும், பிரபல தொழிலதிபர் எம். ஏ. நாதன் அவர்களின் தலைமையிலும் நடைபெற்றது.

இந்த திருமண விழாவில் காளையார்கோவில் திமுக தெற்கு ஒன்றிய துணைச்செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி, வி. எஸ். எம். எஸ். எஸ்தர் மேரி, காளையார்கோவில் கிளைக்கழக செயலாளர் ஆர். வி. எஸ். அரங்கநாதன், மாவட்ட பிரதிநிதி மேனாள் கவுன்சிலர் கந்தசாமி, தச்சனேந்தல் அக்கினிச்சாமி, சிறியூர் அழகர்சாமி, ஐடி விங் தினேஷ் அரசு, சக்திவேல், சதாம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்...

# வண்டலூர் உயிரியல் பூங்கா: ஆண் சிங்கம் வீரா உடல்நலக் குறைவால் உயிரிழப்பு

சென்னை ஏப் 1

சென்னை அடுத்துள்ள செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வீரா என்ற ஆண் சிங்கம் பராமரிக்கப்பட்டு வந்தது. சிறு வயதில் இருந்தே இடுப்புத்திசுக்கள் பாதிக்கப்பட்டிருந்த இந்த சிங்க த்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. கடந்த ஒரு மாத காலமாக தீவிர மருத்துவ பராமரிப்பில் இருந்த நிலையில் நேற்று முன்தினம் (மார்ச் 28) அந்த சிங்கம் உயிரிழந்தது. இதனையடுத்து பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு பூங்கா வளாகத்திலேயே அந்த சிங்கம் புதைக்கப்பட்டது. கடந்த 2011ம் ஆண்டு, ராகவ் கவிதா ஆகிய சிங்கங்களுக்குவீராஎன்ற ஆண் சிங்கம் பிறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# திருக்கோஷ்டியூரில் ஒன்றிய பாஜக அரசிற்கெதிரான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்: ஏராளமானோர் பங்கேற்பு



நூறு நாள் வேலைத் திட்ட பணியாளர்களது ஊதியமான 4034 கோடி ரூபாயினை தரமறுக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை தமிழகம் முழுவதும் உள்ள ஒன்றியக்கழகங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட கழகத்தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்களின் ஆணையின்படியும் சிவகங்கை மாவட்ட திமுக செயலாளரும் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறைஅமைச்சருமானகேஆர்.பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரிலும்சிவகங்கைமாவட்ட முழுவதும் திமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அந்த வகையில் திருப்புத்தூர்தெற்கு ஒன்றியக்கழக திமுக சார்பில் திருக்கோஷ்டியூரில்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட விவசாய அணி தலைவர் எஸ். எஸ். அருணாச்சலம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்புத்தூர் தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் சேர்மன் சண்முகவடிவேல், பேரூர் சேர்மன் கோகிலாராணி நாராயணன், திருப்புத்தூர் பேரூர்க்கழக செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், ஆகியோர் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது..

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிவகங்கை மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் என். எம். சாக்ளா, மாவட்ட ஐடி விங் துணை அமைப்பாளர்கள் மெ. காளிமுத்து, ஒய்க்கா சோமு, பிள்ளையார்பட்டி சதீஷ் குமார், ஐடி விங் பசும்பொன் பாலா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மோடி தலைமையிலான ஒன்றிய அரசிற்கெதிரான கண்டன முழக்கங்களை எழுப்பினர்...

# ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 4வது கல்லூரி ஆண்டு விழா



திண்டுக்கல், ஏப்.1

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில் மாவட்ட கலெக்டர் செ.சரவணன், முன்னிலையில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4 வது கல்லூரி ஆண்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் இயங்கும் அனைத்து கல்லூரிகளிலும் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் காலை சிற்றுண்டி திட்டம், 2024 டிசம்பர்மாதம் முதல் மதிய உணவு திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

கல்லூரியில் படிக்கும் மாணவியர்கள் கடின உழைப்பு, விடா முயற்சி, தன்னம்பிக்கை ஆகியவைகளை கடைபிடித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். உங்கள் எண்ணங்கள் வானத்தை தொடுகின்ற அளவிற்கு இருக்க வேண்டும். குறிக்கோள், விடாமுயற்சி, தன்னம்பிக்கையுடன் படிக்க வேண்டும். மேலும், இக்கல்லூரியில் படித்த மாணவியர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினார்கள் என்ற பெருமையை நீங்கள் ஏற்படுத்தி தர வேண்டும். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.18 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், அரசு நகரப் பேருந்துகளில் மகளில் இலவச பயணம்மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப்பட்டு, வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் சுமார் ரூ.900 வரை சேமிப்பு ஏற்படுகிறது.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் பெண்கள் உயர்கல்வி படிப்பது 34 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 5 இலட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி( தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர்கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.360 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. படித்து, இந்த சமுதாயத்திற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் உங்கள் வாழ்க்கையில் உயர வேண்டும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளின் நிலஉடமை பதிவுகள் செய்யும் பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு




புதுக்கோட்டை, ஏப் 1

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில், விவசாயிகளின் நிலஉடமை பதிவுகள் செய்யும் பணியினை, செய்தியாளர்கள் பயணத்தின்போது, இணை இயக்குநர் (வேளாண்மை) மு.சங்கரலட்சுமி நேரில் பார்வையிட்டார்.

பின்னர், செய்தியாளர்கள் பயணத்தின்போது, இணை இயக்குநர் (வேளாண்மை) தெரிவித்ததாவது

தமிழக அரசு விவசாயிகளின் நலன் காத்திடும் வகையில் எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், தங்கள் கிராமங்களில் நடத்தப்படும் சிறப்பு முகாய்களில் கலந்து கொண்டு தங்கள் நில விவரங்களை மார்ச் 31 ஆம் தேதிக்குள் பதிவு செய்திட தங்கள் அருகாமையில் உள்ள பொது சேவை மையங்களில் கட்டணமின்றி பதிவு செய்து பயன் பெறலாம்.

அதன்படி, அன்னவாசல் வட்டாரத்தில், விவசாயிகளின் நிலஉடமை பதிவுகள் செய்யும் பணி இன்றையதினம் செய்தியாளர்கள் பயணத்தின்போது நேரில் பார்வையிடப்பட்டது. விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப்பலன்களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள்,

பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொருமுறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும், அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும் அனைத்து விவரங்களையும் மின்னணு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (யுபசளூவயஉம) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 93,885 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர்.

மேலும் அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பதிவு செய்திட அனைத்து கிராமங்களிலும் பதிவுகள் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, விவசாயிகள் ஆதார் எண், கைபேசிஎண், நில உடைமை விவரங்கள் ஆகியவற்றை இணைத்திட சம்பந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் நடைபெற்று வரும் முகாமில் பங்கேற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. விவசாயிகள் நில உடைமை விவரங்கள் இணைக்கப்பட்ட பின்னர் அனைத்து விவரங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆதார் எண் போன்ற தனித்துவமான தேசிய அளவிலான அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும். 202526ஆம் நிதி ஆண்டு முதல் பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (ஆமுஜளுயு) ல் தொடர்ந்து தவணைத் தொகைகளை பெறுவதற்கு விவசாயிகளின் நிலஉடமைகளை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாயம் ஆகும்.

எனவே விவசாயிகள் தங்களது கிராமங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள், அருகில் உள்ள பொது சேவை மையங்களுக்கு நேரடியாக சென்று தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி 31.03.2025ஆம் தேதிக்குள் இத்திட்டத்தில் பதிவு செய்து பயன் பெறலாம் எனவும் செய்தியாளர்கள் பயணத்தின் போது, இணை இயக்குநர் (வேளாண்மை) மு.சங்கரலட்சுமி தெரிவித்தார்.

# ஒட்டன்சத்திரத்தில் ஆதித்தமிழர் கட்சி சார்பில் 3% உள் இடஒதிக்கீட்டை பேணி காத்த தமிழக முதல்வருக்கு நன்றி பாராட்டு விழா




ஒட்டன்சத்திரம் ஏப் 1

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஆதித்தமிழர் கட்சியின் சார்பில் அருந்ததியர் மக்களுக்கு 3% உள் இடஒதிக்கீட்டை பேணிகாத்ததோடு அனைத்து எதிர்ப்புக்களையும் மீறி உள் இடஒதிக்கீட்டை நிலைநாட்டிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்க்கு நன்றி பாராட்டு விழா ஆதித்தமிழர் கட்சியின் நிறுவனர் கு.ஜக்கையன் தலைமையில் நடைபெற்றது.

தமிழக முதல்வருக்கு நன்றி பாராட்டு விழா நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்தி ராஜன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தமிழக முதல்வர் அவர்களை ஆதித்தமிழர் கட்சி நிறுவனர் கு.ஜக்கையன் நன்றி பாராட்டி பேசியதாவது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் அருந்ததியர்கள் நீண்ட ஆண்டுகால கோரிக்கையான 3% உள் இட ஒதிக்கீடு வழங்கப்பட்டது. அந்த உள் இட ஒதுக்கீட்டை மறு சீர்ஆய்வு செய்ய வேண்டுமென்று பல இயக்கங்கள் போராடி வந்த நிலையில் அதை தகர்த்தெறிந்து ஒதுக்கீட்டை உறுதி செய்து நிலை நாட்டிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அருந்ததியர் சமுதாய மக்கள் சார்பில் நன்றி கலந்த பாராட்டுக்களை தெரிவிப்பதோடும் பட்டியலின மக்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சிறப்பு திட்டங்களை தந்து ஓய்வில்லா சூரியனாக உழைத்துக் கொண்டிருக்கும் தி.மு.க திராவிட மாடல் அரசிற்கு வருகின்ற காலங்களில் உறுதுணையாக இருப்போம் என கூறியதோடு, இந்த மண்ணின் மைந்தர் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் எம்.ஜி.ஆர் ஆகவும் கலைஞராகவும் பார்க்கக்கூடிய ஒரே மாமனிதர் எங்கள் அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தான் என்று புகழாரம் சூட்டினார்.

நன்றி பாராட்டு விழாவில் ஒட்டன்சத்திரம் நகர மன்ற தலைவர் திருமலைசாமி, துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, ஆதித்தமிழர் கட்சி மாநில பொதுச் செயலாளர் விஷ்வைக்குமார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மாநில அமைப்பு செயலாளர் திலீபன், ஆதித்தமிழர் கட்சி திண்டுக்கல் மாவட்ட தலைவர் வினோத், மாவட்டச் செயலாளர் பழனிராஜா ஆதித்தமிழர் கட்சி மாநில மண்டல மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் பல மாவட்டங்களில் இருந்தும் ஆதித்தமிழர் கட்சி நிர்வாகிகள் பலரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# அன்பும் அருளும் பொழியும் ஈகைத் திருநாள் வாழ்த்துகள்

## எஸ்டிபிஜ மாநில தலைவரின் ஈகைப் பெருநாள் வாழ்த்து



நெல்லை, ஏப். 1

மேலப்பாளையம் விரிவாக்கம் பகுதி கரீம் நகர் மஸ்ஜித் ஹுதா பள்ளி வாசல் சார்பாக நோன்பு பெருநாள் திடல் தொழுகை மதீனா சிபிஎஸ்சி பள்ளி திடலில் நடை பெற்றது ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு பள்ளி வாசல் தலைவர் சாகுல் ஹமீது உஸ்மானி பெருநாள் உரை ஆற்றினார்,

இதில் எஸ்டிபிஜ கட்சி மாநில தலைவர் நெல்லை முபாரக் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு ஈகைப் பெருநாள் வாழ்த்துச் செய்தி கூறினார் , புனிதம் நிறைந்த ரமழான் மாதத்தில், நோன்பிருந்து, திருக்குர்ஆனை ஓதி, இறையோனை வணங்கி, நல்லறங்களைப் பேணி, ஏழைகளுக்கு ஈந்து, இறையருளைப் பெற்று, ஈதுல் ஃபித்ர் எனும் ஈகைத் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருக்குர்ஆன் இறக்கியருளப்பட்ட இந்த புனித ரமழான் மாதம், நமக்கு ஒரு மகத்தான பயிற்சிக் களமாக அமைந்து, ஆண்டு முழுவதும் கடமையுணர்வுடனும், ஒழுக்கத்துடனும் வாழும் பண்பை ஊட்டியுள்ளது. இந்நற்பண்புகள் நம் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்க, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுவோம்.

பசித்தோருக்கு உணவளி, நோயாளிகளை நலம் விசாரி, நலிவுற்றோருக்கு உதவி செய், அண்டை வீட்டாரிடம் அன்பு காட்டு என்று இஸ்லாம் வலியுறுத்தும் சகோதரத்துவத்தை நம் வாழ்வில் உறுதியாகப் பின்பற்றி, அன்பு, கருணை, ஈகை, பரஸ்பர நட்பு, பகிர்ந்து கொள்ளுதல், சமாதானம் ஆகிய நற்குணங்களுடன் அண்டை அயலாரோடு இணைந்து வாழ்வோம். மத நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் பேணி, இறைத்தூதரின் வழியில் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திப்போம். புத்தாடை உடுத்தி, அறுசுவை உணவுகளை அருந்தி, உற்றார் உறவினருடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து இந்நாளை இனிதே கொண்டாடுவது போல, வாழ்நாள் முழுவதும் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்க எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

இவ்வாறு அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். உடன் பள்ளிவாசல் நிர்வாகிகள் முஸ்தபா ஜாபர் அலி , ஜவஹர், தாவுத் ஹாஜியார், முஸ்தபா, ஜெய்னுல் ஆபிதீன், மீரான் முகைதீன் அன்வாரி, கட்சி நிர்வாகிகள் மாவட்ட தலைவர் எஸ்.எஸ்.எ.கனி, பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ஆரிப் பாட்ஷா,லெப்பை,கல்வத், சிந்தா இருந்தனர் ஆயிரக்கணக்கான பெண்கள், ஆண்கள் தொழுகையில் திரளாக கலந்து கொண்டன

# சேலம் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கென தொடர்ச்சியாக

## பல்வேறு சிறப்பான திட்டங்கள்: அமைச்சர் ஆய்வு செய்து தகவல்



சேலம், ஏப் 1

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 25.03.2025 அன்று காணொலிக் காட்சியின் வாயிலாக சேலம், சீலநாயக்கன்பட்டியில் ரூ. 13.46 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அச்சு குழுமம் மற்றும் அரியாக்கவுண்டம் பட்டியில் ரூ.25.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வெள்ளி கொலுசு உற்பத்தி மையத்தினை திறந்து வைத்ததைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் , மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் மிகுந்த கவனத்தோடும், அக்கறையோடும் பல்வேறு உலக நாடுகளுக்குச் சென்று தொழில் முதலீடுகளை ஈர்த்து வருகிறார்கள். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிபெற வேண்டும் என்பதற்காக அந்தந்த மாவட்டங்களில் உள்ள தொழில்கள் மேம்பாடு அடைய பல்வேறு கட்டடங்கள் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் சேலம் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கென தொடர்ச்சியாக பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 25.03.2025 அன்று காணொலிக் காட்சியின் வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் அரியாக்கவுண்டம் பட்டியில் ரூ.25.34 கோடி மதிப்பீட்டில் 99,346 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள வெள்ளி கொலுசு உற்பத்தி மையத்தினைத் திறந்து வைத்தார்கள். இதனைத்தொடர்ந்து, இம்மையத்தின் பயன்பாடுகள் குறித்து இன்றையதினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தைச் சேர்ந்த அச்சுத்தொழில் மேற்கொள்பவர்களும் பயனடைகின்றனர். அதேபோன்று, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம் கிராமத்தில் 20.07 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது.

இத்தொழிற்பேட்டை உருவாக்கத்தின் மூலம் சுமார் 500 நபர்கள் நேரடியாகவும், 1,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுவர். சேலம் மாவட்ட வளர்ச்சிக்கென பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர்க்கு சேலம் மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

# அரசுப்பணியில் இருந்து விருப்ப ஓய்வு பெறும்

## வி.கே.பாண்டியன் மனைவி மத்திய அரசு ஒப்புதல்

புவனேஸ்வரம், ஏப் 1

ஒடிசாவில் முதல்மந்திரி மோகன் சரண் மஜி தலைமையில், பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. இங்கு முந்தைய பிஜு ஜனதாதள ஆட்சியில், அப்போதைய முதல்மந்திரி நவீன் பட்நாயக்கின் நெருங்கிய உதவியாளராக, தமிழகத்தைச்சேர்ந்தஐ.ஏ.எஸ்., அதிகாரி வி.கே.பாண்டியன் இருந்தார். கட்சியிலும், ஆட்சியிலும் செல்வாக்கு மிக்க நபராக வலம் வந்த பாண்டியன், 2023 அக்டோபரில், விருப்ப ஓய்வு பெற்றார். இதன்பின், பிஜு ஜனதா தளத்தில் முறைப்படி சேர்ந்த அவர், கட்சிப் பணிகளில் தீவிரம் காட்டினார்.

இதை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பா.ஜ.க. கடுமையாக விமர்சித்தது. தொடர்ந்து, 2024ல் நடந்த சட்டசபை மற்றும் லோக்சபா தேர்தலில், பா.ஜ.க.விடம் ஆட்சியை பிஜு ஜனதாதளம் பறிகொடுத்தது. இதற்கு வி.கே.பாண்டியன் தான் காரணம் என பரவலாகப் பேசப்பட்ட நிலையில், தீவிர அரசியலில் இருந்து அவர் விலகினார்.

இவருடைய மனைவி சுஜாதா. இவரும் ஐ.ஏ.எஸ். அதிகாரி. ஒடிசா மாநிலத்தை சேர்ந்த இவரை வி.கே.பாண்டியன் காதலித்து மணந்து கொண்டார். ஒடிசாவில் பா.ஜனதா தலைமையிலான அரசு பதவி ஏற்றதும், சுஜாதா வேறு துறைக்கு மாற்றப்பட்டார். அந்த பணியில் சேராமல் அவர் 6 மாத விடுப்பு எடுத்தார்.

விடுப்புகாலம் முடிந்த பின்னரும் தனது விடுப்பை நீட்டிக்குமாறு அவர் அரசுக்கு கோரிக்கை விடுத்தார். ஆனால் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்த நெருக்கடியால் அவர் அந்த பணியில் சேரும் நிலை ஏற்பட்டது.

இந்த சூழலில் ஐ.ஏ.எஸ். அதிகாரியான சுஜாதா, சொந்த பணி காரணமாக அரசுப்பணியில் இருந்து விருப்ப ஓய்வு பெறுவதாக அரசுக்கு கடிதம் அனுப்பி இருந்தார். இந்நிலையில் வி.கே.பாண்டியனின் மனைவி சுஜாதா கார்த்திகேயனின் விருப்ப ஓய்வுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

# 100 டிகிரி அடிக்கும் கோடை

## வெயிலிலும், வற்றாத தண்ணீர் பள்ளம்




திருப்பத்தூர் சேலம் தேசிய நெடுஞ்சாலையில் அதிசயம்!

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சேலம் தேசிய நெடுஞ்சாலையில் TMC காலனி அருகில் நீண்ட நாட்களாக பள்ளம் ஒன்று இருந்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலை என்பதனால் ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்ற அந்த சாலையில் பள்ளம் காரணமாக விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக அதிக அளவில் உள்ளது. இது சம்பந்தமாக நாளிதழ் செய்தியாக வெளிவந்தது உடனடியாக திருப்பத்தூர் மாவட்ட நெடுஞ்சாலை துறையும் மின்னல் வேகத்தில் அந்த பள்ளத்தை மூடினார்கள். மூடிய ஒரு சில மணி நேரங்களிலே மீண்டும் அந்தப் பள்ளம் பழையபடி தண்ணீர் நிரம்பி வாகன ஓட்டிகளுக்கு அச்சுறுத்தலாக மாறி உள்ளது... உடனடியாக நாசா விஞ்ஞானிகள் உதவியை நாடி இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காண வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தோழமையுடன் மாவட்ட செய்தியாளர் அ. ரகுநாதன் திருப்பத்தூர்

# 'இட்லி கடை' படத்தின் அப்டேட் கொடுத்த அருண் விஜய்



நடிகர் தனுஷ், 'பவர் பாண்டி, ராயன்', 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' போன்ற திரைப்படங்களை தொடர்ந்து தற்போது இயக்கி இருக்கும் படம் 'இட்லி கடை'.

இது தனுஷின் 52வது திரைப்படமாகும். தனுஷே இயக்கி நடிக்கும் இத்திரைப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். இந்த படத்தினை டான்பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. நித்யாமேனன், அருண்விஜய், ராஜ்கிரண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படம் வருகிற ஏப்ரல் மாதம் 10ந் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது.

சமீபத்தில் இப்படத்தின் தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் பேட்டி ஒன்றில், "நித்யா மேனன், அருண் விஜய், ராஜ் கிரண் ஆகிய நடிகர்களின் கால்ஷீட் பிரச்சினை காரணமாக படப்பிடிப்பு முழுவதும் நிறைவடையவில்லை. இன்னும் 10 சதவீத படப்பிடிப்புகள் மீதம் உள்ளது. நல்ல படத்தை அவசர அவசரமாக வெளியிட வேண்டாம் என நினைக்கிறோம். எனவே விரைவில் இட்லி கடை படத்தின் புதிய ரிலீஸ் தேதி அறிவிக்கப்படும்." என்று தெரிவித்தார்.

இந்நிலையில், இப்படத்தின் அப்டேட் ஒன்றை அருண் விஜய் பகிர்ந்துள்ளார். அதன்படி, போஸ்டர் ஒன்றை பகிர்ந்து, 'பெரிய படமாக இது இருக்கும்' என்று பதிவிட்டுள்ளார்.

# 'வீர தீர சூரன்' மூன்றாம் பாகத்திற்கான அப்டேட் கொடுத்த விக்ரம்



சித்தா பட இயக்குனர் எஸ்.யு.அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் 'வீர தீர சூரன் 2'. இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷாரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இதில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் மதுரையை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்ட இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இப்படம் ரூ.15 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

அடுத்தடுத்து விடுமுறை தினங்கள் என்பதால் இப்படத்தின் வசூல் மேல் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், நடிகர் விக்ரம் 'வீர தீர சூரன்' படத்தை விளம்ரப்படுத்தும் பணிகளில் மும்முரம் காட்டி வருகிறார்.

இந்தநிலையில் 'வீர தீர சூரன்' படத்தின் இரண்டாம் பாகம் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்று வரும் நிலையில் முதல் பாகமும் மூன்றாம் பாகமும் கண்டிப்பாக எடுப்போம் என்ற அப்டேட்டை பகிர்ந்துள்ளார். இதனால் ரசிகர்கள் மிகவும் உற்சாகத்தில் இருக்கின்றனர்.

# பூரி ஜெகன்நாத் இயக்கத்தில் நடிக்கும் விஜய் சேதுபதி



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஜய் சேதுபதி. சமீபத்தில் இவரது நடிப்பில் வெற்றி மாறன் இயக்கத்தில் வெளியான 'விடுதலை 2' படம் நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து இவர் மிஷ்கின் இயக்கத்தில் 'டிரெயின்' படத்திலும், ஆறுமுக குமார் இயக்கத்தில் 'ஏஸ்' படத்திலும் நடித்து முடித்துள்ளார். இந்த இரண்டு படங்கள் அடுத்தடுத்து வெளியாக உள்ளன.

மேலும் 'கடைக்குட்டி சிங்கம், எதற்கும் துணிந்தவன்' போன்ற படங்களை இயக்கிய பாண்டிராஜ் இயக்கத்தில் புதிய படத்தில் நடித்து வருகிறார். நித்யா மேனம் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

அதனை தொடர்ந்து இயக்குனர் பூரி ஜெகன்நாத் இயக்கத்தில் புதிய ஒன்றில் நடிக்க உள்ளார். இயக்குனர் பூரி ஜெகன்நாத் 'போக்கிரி, பிசினஸ்மேன், டெம்பர், லிகர், டபுள்இஸ்மார்ட்' ஆகிய படங்களை இயக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது கூட்டணியில் உருவாக உள்ள படத்தின் படப்பிடிப்பு பணிகள் ஜூன் மாதம் தொடங்க உள்ளது. பான் இந்திய மொழிகளில் தயாராக உள்ள இப்படத்தை நடிகை சார்மி கவுர் தயாரிக்க உள்ளார்.

# வெஸ்ட் இண்டீஸ் டி20 அணிக்கு புதிய கேப்டன் நியமனம்

## யார் தெரியுமா..?



ஒரு காலத்தில் கொடிகட்டி பறந்த வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி தற்போது சிறிய அணிகளை வீழ்த்த கூட முடியாமல் தடுமாறி வருகிறது. இதற்கு காரணம் அந்த கிரிக்கெட் வாரியத்திற்கும் முன்னணி வீரர்களுக்கு இடையே எழுந்த சம்பள பிரச்சனை மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. இந்த பிரச்சனை எழுந்த உடன் முன்னணி வீரர்கள் சொந்த அணிக்காக விளையாடுவதில் ஆர்வம் காட்டவில்லை.

அதற்கு பதிலாக உலகெங்கிலும் நடைபெறும் டி2 லீக்குகளில் விளையாட ஆர்வம் காட்டினர். தொடர்ந்து தடுமாற்றத்தை சந்தித்து வந்த வெஸ்ட் இண்டீஸ் அணி கடந்த ஆண்டு அமெரிக்காவுடன் சேர்ந்து டி20 உலகக்கோப்பையை வெற்றிகரமாக நடத்தி முடித்தது. அதன் பிறகு அந்த அணி தடுமாற்றங்களில் இருந்து மீண்டு வரும் எதிர்ப்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு பெரும் பின்னடைவாக டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு கேப்டனாக செயல்பட்டு வந்த கிரேக் பிராத்வெய்ட் தற்போது அந்த பதவியில் இருந்து விலகி உள்ளதாக அறிவித்துள்ளார். கடந்த 2021ம் ஆண்டு முதல் டெஸ்ட் அணியின் கேப்டனாக செயல்பட்டு வந்த அவர் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கேப்டன் பதவியில் இருந்து விலகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெஸ்ட் இண்டீஸ் டி20 அணிக்கு புதிய கேப்டனாக ஷாய் ஹோப் செயல்படுவார் எனவும் அறிவிக்கபட்டுள்ளது. தற்போது டி20 அணியின் கேப்டனாக செயல்பட்டு வரும் ரோவ்மன் பவல் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். வெஸ்ட் இண்டீஸ் ஒருநாள் அணிக்கு ஷாய் ஹோப் கேப்டனாக செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பவல் தலைமையில் வெஸ்ட் இண்டீஸ் அணி குறிப்பிடத்தக்க வெற்றிகளை குவிக்க தவறியதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. வெஸ்ட் இண்டீஸ் அணியின் புதிய கேப்டன் யார் என்பது வரும் நாட்களில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மும்பை அபார பந்துவீச்சு... கொல்கத்தா 116 ரன்களில் ஆல் அவுட்



18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் மும்பையில் உள்ள வான்கடே ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்று வரும் 12வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற மும்பை முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது.

தொடர்ந்து கொல்கத்தாவின் தொடக்க வீரர்களாக டி காக் மற்றும் சுனில் நரைன் களம் இறங்கினர். இதில் சுனில் நரைன் ரன் எடுக்காமலும், டி காக் 1 ரன்னிலும் அவுட் ஆகினர். தொடர்ந்து களம் இறங்கிய கொல்கத்தா வீரர்கள் மும்பையின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர்.

இதில் ரஹானே 11 ரன், அங்க்ரிஷ் ரகுவன்ஷி 26 ரன், வெங்கடேஷ் ஐயர் 3 ரன், ரிங்கு சிங் 17 ரன், இம்பேக்ட் வீரராக களம் இறங்கிய மனிஷ் பாண்டே 19 ரன் எடுத்து அவுட் ஆகினர். இதனால் கொல்கத்தா அணி 80 ரன்னுக்கு 7 விக்கெட்டுகளை இழந்தது. தொடர்ந்து ஆண்ட்ரே ரசல் மற்றும் ரமன்தீப் சிங் ஜோடி சேர்ந்தனர். இதில் ரசல் 5 ரன்னிலும், அடுத்து வந்த ஹர்ஷித் ராணா 4 ரன்னிலும் அவுட் ஆகினர்.

இறுதியில் கொல்கத்தா அணி 16.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 116 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. கொல்கத்தா தரப்பில் அதிகபட்சமாக ரகுவன்ஷி 26 ரன் எடுத்தார். மும்பை தரப்பில் அஸ்வனி குமார் 4 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 117 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை ஆட உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.